**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 246/2019 |
| Name | : | Sivasubramaniyan |
| P.W. | : | 1 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.07.2025

**எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் ரெட்டிபாளையத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். 27.05.2019 ம் தேதி இரவு 08.00 மணிக்கு நான் எனது SUPER XL TN 78 V 3928 பச்சை நிற வாகனத்திற்கு பெட்ரோல் அடிப்பதற்காக மடத்துக்குளத்தில் வந்துவிட்டு திரும்பி செல்லும் போது வாகனத்தை செங்கழனியம்மாள் கோவில் அருகே சாவியுடன் நிறுத்திவிட்டு இயற்கை உபாதை கழிக்க சென்றேன். அப்போது தெற்கிலிருந்து 21 வயது முதல் 25 வயது இருக்கக்கூடிய 2 நபர்கள் வந்தார்கள் வண்டியை எடுத்துவிட்டு சக்கரை மில் ரோட்டில் மேற்கு நோக்கி சென்றுவிட்டார்கள் நான் பின்னால் ஓடினேன் பிடிக்க முடியவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 1ம் எதிரி அசாருதீன் மற்றும் 2ம் எதிரி அப்பாஸ் தான் வாகனத்தை எடுத்துச் சென்றதாக சாட்சி அடையாளம் காட்டினார். எனது தம்பி காளிமுத்து மற்றும் எனது மகன்களுக்கு தகவல் சொல்லி 2 நாட்கள் தேடினோம் கிடைக்கவில்லை. மடத்துக்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு**

**அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். காணாமல் போன எனது வாகனம் கிடைத்துவிட்டதாக தெரிந்து நீதிமன்றத்தில் இருந்து மனு செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். வாகனத்தை இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் என்னுடையது. **அந்த வாகனம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) காவல் நிலையத்தில் கொடுத்த புகார் போலீசார் எழுதவில்லை என்து தம்பி காளிமுத்து எழுதினார். நான் 2ம் வகுப்பு வரை படித்துள்ளேன். காளிமுத்து 9ம் வகுப்பு வரை படித்துள்ளார். புகாரில் எதிரிகளை பார்த்தால் அடையாளம் தெரியும் என்று சொல்லவில்லை என்றால் போலீசார் கேட்கவில்லை நான் சொல்லவில்லை. போலீசார் சொன்னதன் பேரில் எதிரிகளை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் இருந்து காவல் நிலையம் சுமார் 1 ½ கி.மீ தூரம் உள்ள நிலையில் 36 மணி நேரம் தாமதமாக ஏன் புகார் கொடுத்தேன் என்றால் தேடிப் பார்த்து கிடைக்காததால் புகார் கொடுத்தேன்.

(2) வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் என் பெயரில் உள்ளது. போலீசாரிடம் கொடுத்தேன். புகார் கொடுத்த பின்பு போலீசார் என்னை விசாரித்தார்கள். வாக்குமூலம் பதிவு செய்ததாக ஞாபகம் இல்லை. நான் வாகனம் நிறுத்திவிட்டு இயற்கை உபாதைக்கு சென்றதாக சொல்லும் இடத்தில் கோவில் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். ஆள் நடமாட்டம் உள்ள இடத்தில் இயற்கை உபாதைக்கு சென்றதாக பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன இடத்தில் நேரத்தில் வாகனம் திருட்டு போகவில்லை என்றும் வாகனம் கிடைத்த பின்பு தான் போலீசார் என்னை அழைத்து புகார் பெற்றார்கள் என்றால் சரியல்ல. புகாரை போலீசார் தான் எழுதினார்கள் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்குக் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்து 4 நாட்கள் கழித்து வாகனம் கிடைத்துவிட்டதாக போலீசார் தகவல் சொன்னார்கள்.

**3 ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..<br>Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,<br>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்<br>மடத்துக்குளம் |

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 246/2019 |
| Name | : Kalimuthu |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.07.2025

**எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் ரெட்டியபாளையத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது பக்கத்து வீடு. அ.சா.1 தனது XL SUPER வண்டியை செங்காளியம்மன் கோவில் அருகே நிறுத்திவிட்டு இயற்கை உபாதைக்கு சென்ற போது வாகனத்தை எடுத்துச் சென்றுவிட்டதாக 27.05.2019 ம் தேதி இரவு 08.30 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது அ.சா.1 னின் தம்பி காளியப்பன் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். நானும், காளியப்பனும் வந்து சர்க்கரை மில் ரோட்டில் தேடிப் பார்த்தோம். வாகனம் கிடைக்கவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 246/2019 |
| Name | : Karthikeyan |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.07.2025

**எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் செங்கழனிபுதுாரில் வசித்து டு வீலர் ஒர்க் ஷாப் வைத்துள்ளேன். 27.05.2019 ம் தேதி செங்கழனியம்மான் கோவில் அருகே இருசக்கர வாகனம் தொலைந்துவிட்டது. வண்டி தேடிக்கொண்டு இருந்தார். 2 நாட்கள் கழித்து காலை 10.00 மணிக்கு போலீசார் எனது ஒர்க் ஷாப்பில் வந்து விசாரித்தார்கள். வாகனம் திருடப்பட்ட இடத்தில் வைத்து போலீசார் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் வேறு ஒருவர் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் விசாரித்தது பற்றி எழுதியிருந்தார்கள். சம்பவ இடமாக எந்த இடம் காட்டப்பட்டிருந்தது என்றால் செங்கழனியம்மன் கோவிலுக்கு மேல்புறம்

தண்டபாணி என்பவர் வீட்டிற்கு கொஞ்சம் தள்ளி காட்டப்பட்டிருந்தது. நான் டு வீலர் ஒர்க் ஷாப் வைத்துள்ளதால் காவல் நிலையத்தார் கேட்டுக்கொண்டதன் பேரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 ம் எதிரி தரப்பில் இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்